ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

अनापृच्छ्य ज्ञातीनवशरुदितोच्छूननयनान्
गतिः का नस्तातेत्यतिकरुणमग्रे विलुठितान् ।
अवश्यं गन्तव्यं खलु तदहितानामपि पुर-
स्तदद्यैव स्नेहं त्यज हृदय तेष्वर्च गिरिशम् ॥ मानसोल्लासः ।

𑌅𑌨𑌾𑌪𑍃𑌚𑍍𑌛𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌤𑍀𑌨𑌵𑌶𑌰𑍁𑌦𑌿𑌤𑍋𑌚𑍍𑌛𑍂𑌨𑌨𑌯𑌨𑌾𑌨𑍍
𑌗𑌤𑌿𑌃 𑌕𑌾 𑌨𑌸𑍍𑌤𑌾𑌤𑍇𑌤𑍍𑌯𑌤𑌿𑌕𑌰𑍁𑌣𑌮𑌗𑍍𑌰𑍇 𑌵𑌿𑌲𑍁𑌠𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌅𑌵𑌶𑍍𑌯𑌂 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌤𑌦𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌪𑍁𑌰
𑌸𑍍𑌤𑌦𑌦𑍍𑌯𑍈𑌵 𑌸𑍍𑌨𑍇𑌹𑌂 𑌤𑍍𑌯𑌜 𑌹𑍃𑌦𑌯 𑌤𑍇𑌷𑍍𑌵𑌰𑍍𑌚 𑌗𑌿𑌰𑌿𑌶𑌮𑍍 ।

ஹே ஹ்ருதய-ஹே மனமே மானிடப்பிறவியைப் பெற்றிருப்பதால் உன்னுடைய பிரிவை ஸஹிக்காமல் தம் சக்திக்கு மீறி அழுவதால் மிகவும் சுருங்கிக் கஷ்டப்படும் கண்களை உடையவர்களுக்கும், அப்பா குழந்தாய் எங்களுக்கு யாதொரு கதியுமில்லையே என்செய்வோமென்று தைரியத்துடன் முந்தி விழுந்து புரண்டு கதருகிறவர்களுமான ஞாதிகளை விட்டு விட்டு அவர்களுக்குத் திருப்தியில்லாவிட்டாலும் லோகாந்தரத்தை அவச்யம் அடைந்தே தீரவேண்டும். ஆகையால் உயிருடனிருக்கும் இச்சமயத்திலேயே அவர்களிடமிருக்கும் ஸ்நேகத்தை அறவேயொழித்து ஸ்ரீ பரமேசுவரனைப் பூஜை செய்.

ஒரு பக்தர் பந்து ஜனங்களிடம் விசேஷமான அபிமானங் கொண்டு தனக்கு வேண்டிய நற்கர்மங்களைச்செய்யாமல் கெட்ட வழிகளில் போகும் தன்னுடைய ஹிருதயத்தை மித்திரனாகக் கருதிஉபதேசிக்கின்றார்.

ஹே சித்தமே! நீ எவ்வளவு அபிமானம் பந்துக்களிடம் வைத்தாலும் அவர்கள் உன்னிடம் எவ்வளவு அன்பு பாராட்டினாலும் உங்களிருவரையும் எதிர்பாராமல் அவச்யம் இச்சரீரம் ஒரு ஸமயம் நாசத்தை அடையப் போகின்றது நிச்சயம. அக்காலத்தில் இவர்களுடைய அபிமானத்தால் ஒன்றும் உபயோகமில்லை. பகவானுடைய கிருபைதான் அவச்யம் வேண்டும். நம் வாழ்நாட்களை வீணில் கழித்து முடிவு காலத்தில் அவரை நாம் எதிர்பார்த்தால் யாதொரு பயனும் ஏற்படாது. ஆகையால்இப்பொழுது முதல் ஸ்ரீமஹேசுவரனைஉபாஸித்தால் எக்காலத்திலும் நம்மைக் கைவிடாமல் பாது காப்பார். அவரையே பூஜைசெய்.

உபபத்திராதிப

# ஆர்ய தர்மம்.

விபவ-ஹூ அற்பிசி-மீ ௧௬௨


## ஜய விஜ.

(466-வது பக்கத்தொடர்ச்சி)

தீண்டத்தகாதவர்கள் ஆலயம் முதலிய சிலவிடங்களில் பிரவேசிக்காமலிருப்பதால் அவர்களுக்கு யாதொரு கஷ்டமுமில்லை. பின்னோ ஏழ்மைத்தனதால் உணவுக்கு வருந்தி கஷ்டப்படுகிறார்கள். ஆலயப்பிரவேசத்தாலும், பிராமணர்களின் வீட்டில் புகுவதாலும் இக்கஷ்டம் எப்படி நிவர்த்தியாகும். 'கண்ணிலிருக்கும் புண்ணுக்கு, கையில் மருந்துபோட்டால் நிவற்தியேற்படுமா? பிரபுக்களாயிருப்பவர்கள் பணவசூல் செய்து அதனால் அவர்களுக்கு உதவி செய்தால் தாரித்திரியரோகம் நிவர்த்தியாகிச் சுகித்திருப்பார்கள். தீண்டாதவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கூத்தாடிக் கூச்சலிடும் கருணைக்கடல்கள் இந்த வார்த்தையே கவனிப்பதேயில்லை. யாராவது நிர்பந்தமாய் தெரிவித்தாலும் அந்தவிடத்தில் பலமாய் மௌனம் ஸாதிக்கிறார்கள். இதனால் தீண்டாதவர்களிடம் இவர்களுக்கிருக்கும் கருணை வெள்ளம் எவ்வளவு பெருகிறதென்று நன்கு விளங்கவில்லையா.

மேலும் ஸ்ரீ பகவான் இவ்வுலகிலுள்ள ஜனங்கள் யாவும் ஜகத்பிரதிஷ்டைக்கு தர்மமே மூலகாரணமாகையால் சுருதிகளில் கூறப்படும் தர்மத்தைக் கைவிடுவதால் அநியாயமாய் நாசத்தை அடைந்துவிடும். தர்ம நாசத்தால் ஏற்படும் வர்ணஸாங்கர்யம் முதலிய தோஷங்களுக்கு நானே கர்த்தாவாக ஆய்விடுவேன். என்னைப்பார்த்து ஸகல ஜனங்களும் கர்மானுஷ்டானத்தை விட்டுவிட்டுப் பாபத்திற்குள்ளாவார்கள். அவ்விதமானால் நானே அவர்களைக் கொன்றவனாக ஆகிறேன். ஆகையால் கர்மானுஷ்டானத்திற்கு அதிகாரிகளான அக்ஞர்களுககு சாஸ்திரவிருத்தமான ஆசாரங்களைப்போதித்து புத்தி பேதத்தை உண்டுபண்ணக்கூடாதென்று கீதாசாஸ்திரத்தில் விஸ்தாரமாய் நிரூபித்திருக்கிறார்.

இதனுல் எவ்வளவு அறிவாளியாயிருந்தாலும், எவ்வித மஹிமை பெற்றிருந்தாலும் சாஸ்திர விருத்தமான ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று ஸாமான்யஜனங்களுக்குத்தம் அனுஷ்டானத்தினுலும், வியவஹாரத்தினுலும் போதிப்பது கூடாதென்றும் அப்படிப் போதிப்பதால் அதை அனுஷ்டித்துக் கெட்டுப்போகும் ஜனங்களை இவர்களே ஹிம்ஸித்தவர்களாகிறுர்கள் என்றும் ஸ்பஷ்டமாய் ஸ்ரீ பகவானே வெளியிட்டிருப்பதை கனம் மாளவ்யா அவர்கள் சற்றும் கவனியாமல் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்கிற சாஸ்திர விருத்தமான இந்த அபிப்பிராயத்தை எப்படி வெளியிட முன் வந்தார்களோ லோகக்ஷேமத்தின் பொருட்டுப் பாடுபடுகிறேம் என்று முன் வந்தவர்கள் சாஸ்திர விருத்தமான ஆசாரத்தைக் கடைப்பிடித்தொழுகும்படி போதித்து ஜனங்களைத் தாபத்திற்குள்ளாக்குவது எங்ஙனம் உசிதமாகும். இவ்விதம் செய்வதுதானு லோகக்ஷேமமான காரியம். இதற்கு முன் எவ்வளவோ மஹான்கள் இவ்வுலக க்ஷேமத்திற்குப் பாடுபட்டவர்களுண்டு அவ்விதமிருந்தும் தீண்டாமை ஒழித்தால் தான் உலகிற்கு க்ஷேமமுண்டாகும் என்று ஒருவராலும் கருதப்படாத அபூர்வமான குருக்கு வழியைத்தற்காலத்திலுள்ளவர்கள் கண்டு பிடித்திருக்கிறுர்கள். இவர்கள் எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டு சிரமப்பட்டாலும் டவுன் வாஸிகளான சில தீண்டாதவர்களைத் தவிர மற்றுமுள்ள கிராமங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கானவர்களிடம் இவர்கள் பிடிவாதம் அற்பமேனும் பயன் படாது என்று ஆங்காங்கு வஸிப்போர்களுக்கு நன்கு தெரிந்த விஷயமே. நகரவாஸிகளான சிலரைத்தான் ஏன் இவர்கள் பாபத்திற்குள்ளாக்கித்தாமும் தோஷத்திற்கு ஆளாகவேண்டுமென்று கருதி பிரமாணங்களின் வாயிலாக உண்மையை அறிவித்தால் பிறகாகிலும் இந்தக் கெட்ட காரியத்திலிருந்தும் நிவர்த்தியடைவார்களென்று இவ்விதம் வெளியிட முன் வந்தோம்.

ஒருவர் பேரில் அசூயையினுலோ பக்ஷபாதத்தினுலோ இவ்விதம் வெளியிடவில்லை என்பது உண்மை. இதற்குப் பிறகும் இந்த விஷயத்தில் எங்கள் பிடிவாதத்தை நாங்கள் விடமாட்டோமென்று அதர்மத்தில் பிரவர்த்தித்தார்களேயானுல் அவர்களுக்கு ஆஸ்திக புத்தியைக் கொடுத்து சாஸ்திரீயமான தர்மமார்க்கத்தில் பிரவேசிக்கும்படி அனுக்ரஹம் செய்ய வேண்டுமென்று எங்

கும் நிறைந்த பரஞ்சோதி ஸ்வரூபமாய் பிரகாசிக்கும் கருணா நிதியான ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவடிகளை தியானித்து இவ் விஷயத்தையும் முடித்துக் கொள்கிறோம். சுபம்!

உபபத்திதிராதிபா.

---

## விபவஸூ ஆவணிமீ 8உ 2-வது குருவாரப்பத்திரிகையில் 382.வது பக்கத்தில் கண்ட ஓர் விக்ஞாபனத்திற்கு விடை.

ஒரு மாதத்தில் இரண்டு திதிகள் வந்தால் இரண்டு திதிகளிலும் மாஸிகம் செய்ய வேண்டுமா என்ற கேள்விக்கு பதில்

2 ஸௌரமானம் என்கிற வாக்கியப்படி அடியில் கண்ட வசனப்படி ஒரு மாதத்தில் இரண்டு திதிகள் வந்தாலும் அந்த திதி இரண்டிற்கும் யாதொரு தோஷமில்லாமல் சுத்தமாக இருந்தாலும் சரி, அல்லது உபராகம் ஸங்கிரமணம் என்ற தோஷங்களால் பீடிக்கப்பட்டிருந்தாலும் சரி, ஷை மாஸிகம், சிரார்த்தங்கள் பிந்தின இரண்டாவது திதியில் தான் செய்ய வேண்டும்.

3. மேல்கண்ட இரண்டாவது திதிக்கு உபராகம் ஸங்கிரமண தோஷங்கள் இருந்தால் முதலாவது திதி தோஷாஹிதமாக இருந்தால் முந்திய முதல் திதியில் செய்யவேண்டும்.

4. एकमासे तिथिद्वैते मासिकाब्दिकयोः परा ।
सा चोपरागसंक्रान्तिदुष्टा चेत्पूर्विका स्मृता ॥

ஏகமாஸே திதித்வைதே மாஸிகாப்திகயோ: பரா ।
ஸாசோபராகஸங்க்ராந்திதுஷ்டா சேத்பூர்விகா ஸ்ம்ருதா ॥

5. சாந்திரமானம் என்ற ஸித்தாந்தப்படிக்கு அதிக மாஸம் வந்தால் ஸித்தாந்தக்காரர்கள் ஒரு மாதத்தில் இரண்டுதிதிகளிலும் செய்யவேண்டும். முதல் திதி ஸங்கல்பமாயும், இரண்டாவது திதி பார்வணமாயும் செய்யலாமென்று கிரந்தங்களில் சொல்லி வருகிறது.

R. ஸேதுராமய்யங்கார்,
ஜோஸ்யம், பரமக்குடி.

---

# மதிப்புரை.

இவ்வூரிலிருந்து ஒவ்வொரு மாதமும், பௌர்ணமி தோறும் வெளிவருகிறதும், நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதுமான, மாத்வமித்திரன் என்கிற பத்திரிகையின் முதல் வால்யூம் 1-நெ. புஸ்தகத்தைக் கண்ணுற்றோம். இதில் மத்வமதப் பிரவர்த்தகர்களான ஆசார்யாளேயும் அவர்களால் இயற்றப்பெற்ற பெருமை வாய்ந்த பல நூல்களேயும், விநாயக சதுர்த்தியின் கதையும் மற்றும் இப்பத்திரிகையை வெளியிட முன் வந்ததின் நோக்கமும், விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. மத்வமதத்தைத் தவிர முக்கியமான அத்வைத, விசிஷ்டாத்வைத மதவிஷயமான தத்துவங்களை ஸாமான்ய ஜனங்களுக்கு புகட்டவேண்டி சிற்சில பத்திரிகைகள் வெளிவந்துலாவும் இக்காலத்தில் இந்த மததத்வங்களை இம்மதத்தினர்களுக்குப் போதிக்க வேண்டி இந்த மாதிரி பத்திரிகையும் வெளிவருவது நலமென்றே எமது அபிப்பிராயம்.

மதஸம்பந்தமான விஷயங்களைவெளியிடும் பத்திரிகைகள்பிற மதத்தின் பெருமையையோ, சிறுமையையோ, சற்றும் கருதாமல் தங்களால் அபிமானிக்கப்பட்ட மதத்தின் பெருமையைப்பற்றி மாத்திரம்எவ்வளவும்போதிக்க முன்வருவதே சாலச்சிறந்ததாகும் இதுவே பெரியார்களின் நோக்கமாகும். இன்னோக்கத்துடனேயே இப்பத்திரிகையும் முறையே வெளியிலுலாவுமென்பதை அறிந்து மகிழ்வடைகிறோம்.

நற்காரியங்களுக்குப் பல இடையூறுகளேற்படும் எனச் சான்றோர் சாற்றியுள்ள நீதிமொழிக்கிணங்க ஒரு ஸமயம் விக்னம் ஏற்பட்டால் எவ்வித விக்னத்தையும் அறவே போக்கவேண்டியே துவக்கத்தில் விநாயகக் கடவுளின் சரிதம் எனப்பெயர் கொடுத்து அவருடைய மஹிமையைப்பற்றிப் போற்றியிருப்பதிலிருந்தும் இப்பத்திரிகைக்கு யாதொரு விக்னமும் ஏற்படாமல் நன்கு விருத்திசெய்யவேண்டிய பொறுப்பை விநாயகரிடமே கொடுத்துவிட்டதாக ஸூசனை செய்திருக்கிறபடியால் இனி இது யாதொரு இடையூறுமின்றி மெம்மேலும் விசேஷமாக விருத்தி அடைந்து ஜனங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்குமென்றும் ஸ்பஷ்டமாயறிவிக்கப்படுகின்றது. இதன்வருடச்சந்தா ரூ. 5-0-0

தற்காலம் ரூ. 3-0-0

வேண்டுவோர்:— மானேஜர்
"மத்வமித்திரன் ஆபீஸ்" வியாஸவிலாஸம்,
கும்பகோணம்.

என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

உபபத்திராதிபர்,

---

குன்னக்குடி ரா. ம. வெ. சுப்பிரமணிய சாஸ்திரியளால் அனுப்பப்பட்ட ஸ்ரீ சிதம்பரேசபஜன ரத்னாவளீ என்கிற நூலைவரப் பெற்றோம்.

இதில் தனுர்மாஸத்திலும், மற்றுமுள்ள உத்ஸவகாலங்களி லும் பகவத் பஜனை செய்யும் பக்தகோடிகளுக்கு உபகாரமாக சிவன், விஷ்ணு, கணேசர், சுப்பிரமணியர், லக்ஷ்மி, சரஸ்வதி, ஸ்ரீ ராமன், ஸீதாதேவி, ஹனுமார், நந்திகேசுவரர், முதலான 40-தேவ தைகளை ஆராதிப்பதற்கு வேண்டிய பஜனை ஸம்ப்ரதாயங்கள் வட மொழியிலும், தென்மொழியிலும், எளிய நடையில் இயற்றப்பட் டிருக்கின்றன. பகவத்பக்தர்களான ஆஸ்திக சிரோமணிகளுக்கு பகவதாராதனம் செய்வதற்கு மிகவும் உபகாரமாயிருக்குமென்று யாவருமறிந்த விஷயமே. எல்லாரும் சுலபமாய் வாங்கவேண்டி இதன் விலை 0—12—0 ஆக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது வேண் டியவர்கள் ரா. ம. வெ. சுப்பிரமணியசாஸ்திரியள் குன்னக்குடி என்கிற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்,

---

(ரத்நமாலையில்)

## ஹம்ஸோதக லக்ஷணம்.

वह्नितप्तमहिमांशुरश्मिभिः शीतमम्बुशशिरश्मिभिर्निशि ।
एवमेव तदहर्निशं स्थितं तच्च हंसजलनामकं स्मृतम् ॥

வஹ்நிதப்தமஹிமாம்சுரச்மிபி:
சீதமம்புசசிரச்மிபிர்நிசி ।
ஏவமேவ ததஹர்நிசம் ஸ்திதம்
தச்ச ஹம்ஸஜலநாமகம் ஸ்ம்ருதம் ।

சுத்தமான ஜலத்தை அக்னியில் கொதிக்க வைத்து ஒரு பகல் முழுவதும் வெய்யிலில் வைத்து விடுகிறது. இரவில் சந்திரக் கிரணங்கள் படும்படி வைத்து விடுகிறது. இப்படி ஒரு இரவு பகல் வைத்தால் அந்த ஜலத்திற்கு ஹம்ஸோதகம் என்று பெயர். அந்த ஜலபாத்திரத்தை லேசான துணியால் மூடிவைக்கவேணும். அந்த ஜலத்தை கல்கார்க்கு சீஸாவில் வைத்து உபயோகப்படுத்திவந்தால் இந்த குணங்களைத் தரும்.

प्रह्लादनं त्रिदोषघ्न हृद्यं लघु विशीतलम् ।
वृष्यं मनोहरं स्वादु विषघ्नं कान्तिकृत्परम् ॥

ப்ரஹ்லாதநம் த்ரிதோஷக்நம் ஹ்ருத்யம் லகு விசீதலம் ।
வ்ருஷ்யம் மநோஹரம் ஸ்வாது விஷக்நம் காந்திக்ருத்பரம் ॥

சோம்பலைப் போக்கும், வாத பித்த தோஷங்களைப் போக்கும், ஆரோக்கியம், சரீரலாகவத்தைத் தரும். நல்ல குளிர்ச்சி, பலம் உண்டாகும், மனதிற்கு இன்பமாயிருக்கும், ருசி, விஷங்களைப் போக்கும், சரீரத்திற்குக் காந்தியைத் தரும்.

कर्पूरागरुजं सिताद्याभिरसैः हंसोदकं वासितं

கர்ப்பூராகருஜம் ஸிதாத்யாபிரஸைஃ ஹம்ஸோதகம் வாஸிதம் ।

அதே ஜலத்தை பச்சைக்கர்ப்பூரம், அகில், சர்க்கரை, முதலிய வாஸனை திரவ்யங்களால் வாஸனைகட்டி உபயோஹிக்க விசேஷ குணமுண்டு. வேறொருவிதமும் உண்டு. சுத்த ஜலத்தைக்கொதிக்கவைத்து வாய் குறுகலான ஒரு பாத்திரத்தில் போட்டு வெட்டிவேர், விலாமிச்சம் வேர் முதலிய வாஸனை வஸ்துக்கள் சேர்த்துத் துணியை இரண்டு மடிப்பாய் மடித்துப் பாத்திரத்தின் வாயை இருகக்கட்டித் தலைகீழாய் தொங்கவிட்டுக் கட்டி வைக்கிறது. இப்படி ஒரு ராத்திரி வைத்திருந்து காலையில் எடுத்து உபயோகித்தால் மேற்பட்ட குணங்களுண்டாகும். பாத்திரத்தை ஸமனாய்க் கட்டினால் ஜலம் ஒழுகாது. இது ஒரு ஹம்ஸோதக லக்ஷணம்.

अम्भसः प्रसृतान्यष्टौ रवावनुदिते पिबन् ।
जीवेत्सवत्सरशतं मुक्तरोगो न संशयः ॥

ஸம்ஸஃ ஸூர்யோதயாத்பூர்வம் பிபேதஷ்டாஞ்ஜலிந்ஜலம் ।
ஜீவேத்வர்ஷசதம் ரோகரோகோ ந ஸம்சயஃ ॥

[பைஷஜ்யரத்னாவளீ

சூரிய உதயத்திற்கு முன் இரண்டு கை கொண்ட ஜலம், எட்டுக் கை ஜலம் குடித்து வந்தால் ஸகல குல்மம், பித்த வாயு, அஜீர்ணம, நீங்கும, ஜாடாரக்னி உண்டாகும். ஆயுள் விருத்தியாகும் எட்டுக்கை ஜலத்தையும் ஒன்ருய்க் குடிக்கக் கூடாது. ஒவ்வொரு தடவையாகச் சிருகச் சுருகக்குடிக்கவேணும். கைகளாலேயே எடுத்துக் குடிக்கவேணும. ஜலத்தில் அமிருதமிருக்கிறது என்பது நிச்சயம. எவ்வளவு ஆஹாரம் தின்ருலும் ஜலம் குடிக்காவிட்டால் ஜீர்ணமாகமாட்டாது. ஜலம் சேர்ந்து ஆஹாரத்தை அமிருதமாக்கி ரக்தத்தில் சேர்த்து சரீர புஷ்டியை உண்டாக்குகிறது. கேவலம ஜலத்தையே உட்கொண்டு எத்தனையோ தபஸ்விகள நெடுநாள வாழ்ந்திருக்கிருர்கள்.

अब्भक्षा वायुभक्षाश्च पर्णाहारा जितेन्द्रियाः ।

அப்பக்ஷா வாயுபக்ஷாஶ்ச பர்ணாஹாரா ஜிதேந்த்ரியாஃ ॥

ஜலத்தில் ஈசுவரன் வஸிக்கிருர். பூர்வம் கிருஷ்ணபகவான் பாரிஜாதஹரணத்திற்காக தேவலோகம் போயிருக்கும் காலத்தில் பில்வதளத்தில் ஜலத்தால் ஈசுவரனை ஆவாஹனம் செய்து பூஜை ஜலத்தாலேயே செய்து பில்வோதகேசுவரர் என்று பெயரிட்டு ஈசுவரன் பிரத்யக்ஷமாகி அனேக வரன்களை கொடுத்ததாக ஹரிவம்சத்திலிருக்கிறது.

இப்படிப் பெருமை வாய்ந்த ஜலத்தை எவ்விதத்திலும் கெடுக்கலாகாது. லக்ஷ்மீ க்ஷீரஸாகரத்தில் உண்டானுளே அதுவும் ஜலந்தானே ஜலத்தைக் கெடுத்தால் லக்ஷ்மீ கடாக்ஷம் போய் விடும். अप्सु भेषजी அப்ஸு ஹேஷஜீ ரிக்வேதம். यो रुद्रो अग्नौ यो अप्सु யோ ருத்ரோ அக்னௌ யோ அப்ஸு யஜுர்வேதம.

சுருதிஸ்மிருதி புராணதிகளால் பெருமை வாய்ந்த ஜலத்தை இகழலாகாது. ஆஸ்திகர்களான நமக்கு தெய்வமாகவும், இதரர்களுக்கு ஸ்வாகாதார வஸ்துக்களில் ஒன்ருயிருப்பதால் எல்லாரும் ஜலத்தை சுத்தமாகவே வைத்துக்கொள்ளவேண்டும்.

## கர்மகாண்ட ரீதியாய் காணக்கூடிய தோஷங்கள்.

### மாயூர மாஹாத்மியம்.

திலீபமஹாராஜன் வஸிஷ்டரிடம் ஈசுவர மஹிமைகளைக் கேட்கும்போது பிராணிகள் கஷ்டப்படுகிறார்களே இதற்குளன்ன காரணம் என்று கேழ்க்க அதற்கு வஸிஷ்டர் பூர்வஜன்மாவில் செய்த கொடுமைகளால் இந்த ஜன்மாவில் ஸம்பவிக்கக்கூடியதுஸ் ஸஹமான ரோகாதிகள், தாரித்திரியம, அனபத்ய தோஷம், முத லியவைகளைச் சொல்லி ஜலத்தில் செய்யும் கெடுதல்களால் நேரக் கூடியவைகளையும் சொல்லுகிறார்.

अग्रे मार्गे नदीतीरे च्छायायां पुलिने च यः ।
मूत्रं पुरीषं वल्मीके यः समुत्सृजेज्जलेऽपि वा ।
श्वयथुव्याधिमाप्नोतीत्येवमाह सदाशिवः ॥

அக்ரே மார்கே நதீதீரே ச்சாயாயாம் புலிநே ச ய: ।
மூத்ரம் புரீஷம் வல்மீகே ய: ஸமுத்ஸ்ருஜேஜ்ஜலேऽபி வா ।
ஶ்வயதுவ்யாதிமாப்நோதீத்யேவமாஹ ஸதாஶிவ: ॥

நடக்கும் வழிகளிலும், நதிக்கரைகளிலும், நல்ல மரங்களின்நிழல் களிலும், மணல் குன்றுகளிலும், புத்திற்கு சமீபத்திலும், ஜலத் திலும், அசுத்தம் செய்கிறவர்கள் சுவயது வியாதியையுடையவ ராவார்கள். இது ஸதாசிவன் சொன்னது.

चण्डालकूपवापीषु तटाके कूपकेऽपि वा ।
स्नानदानात्तथा देहस्फोटकत्वमाप्नुयात् ॥

சண்டாலகூபவாபீஷு தடாகே கூபகேऽபி வா ।
ஸ்நாநதாநாத்ததா தேஹஸ்போடகத்வமாப்நுயாத் ॥

சண்டாளர்களுக்காக ஏற்பட்ட தனிக்கிணறுகளிலும், நடைவாபி யிலும், குளங்களிலும், சிறு கிணறுகளிலும், சண்டாள ஜாதி யல்லாதார் ஸ்னானபானாதிகள் செய்தால் கிரந்திநோயும, வெடிவா யும் உடையவர்களாவார்கள். இதனால் திலீப மஹாராஜன் காலத் திற்கு முன் முதலே சண்டாளர்களுக்கும், வர்ணாச்ரம விதாயகப் படி அவாவர்களுக்குத் தனிக்குளம, கிணர், இருப்பதாய்த் தெரி கிறது. அந்த வழக்கம் நாளது வரை விட்டுப்போகாமல் கிராமா ந்தரங்களில் காணலாம். பள்ளன் குளம், பறையன் ஊரணி, மற்ற வர்களுக்கு வேறுகுளம் இருக்கிறது. ச்மசானமும் வேறுவேறு

இப்படி ஏற்படுத்தி ஒருவருடையதில் மற்றொருவர் பிரவேசம் கூடாதென்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஏற்பாடு ஒவ்வொரு ஊர்களிலும், நிதர்சனமாய்க் காணலாம்.

ஈசுவர ஸ்ருஷ்டியில் பக்ஷி மிருகாதிகளில் கூட ஜாதி வித்யாஸம் இருக்கிறது. பக்ஷிகளில் காக்கையைச் சண்டாள ஜாதி பக்ஷியாகக் கூறுகிறார்கள். முன் காலத்தில் காக்கைகள் வீடுகளின் மேல் வந்து உட்காருகிறதில்லை. காகபலிஹரண காலத்தில் பலி அன்னத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே போய் காக்கையைக் கூப்பிட்டால் வரும். ஸ்தலத்தை சுத்தம் செய்து பலி அன்னத்தை வைத்தால் தின்றுவிட்டு ஓடிப்போய் விடும். எப்போதாவது காக்காய் தப்பி ஓடிவந்து வீட்டில் உட்கார்ந்தாலும் மனிதன் மேல் விழுந்தாலும இவனுக்கு ஸம்பவித்த தோஷத்தால் காகபதனமாச்சுதென்று உடனே காகபதந சாந்திசெய்து கொள்வது வழக்கம்.

அக்காலத்தில் ஆசார சுத்தத்தாலும், தபோவலிமையாலும், காக்கைகள் வீட்டின்மேல் வருவதில்லை. இக்காலத்தில் ஆசாரக் குறைவாலும், காயத்திரீ ஜபம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டதாலும், காக்கைகள் கையில் இருப்பதைக்கவ்விக்கொண்டு போகின்றன.

இக்காலத்தில் காக்கைகள் கிட்ட இருந்தாலும் கூப்பிட்டு பலிஹரணம் வைப்பது என்ற வழக்கமிருந்து வருகிறது. இது போல் மிருகங்களில் கழுதையைச் சண்டாள ஜாதி மிருகமென்கிறார்கள். கழுதையைத் தொட்டாலும், கழுதையின் தூசி மேல் பட்டாலும் ஐசுவரியம் போய்விடும்.

अजारजः खररजः तथा सम्मार्जनीरजः ।
स्त्रीणां पादरजश्चैव शक्रस्यापि श्रियं हरेत् ॥

அஜாரஜ: வராரஜ: ததாஸம்மார்ஜநீரஜ: ।
ஸ்த்ரீணாம் பாதரஜஶ்சைவ ஶக்ரஸ்யாபி ஶ்ரியம் ஹரேத் ॥

ஆட்டின் தூசியும், கழுதையின் தூசியும், துடைப்பத்தின் தூசியும் ஸ்திரீகளின் பாத தூசியும், மேலேபட்டால் இந்திரனாக இருந்தாலும, ஐசுவரியம் போய்விடும். விருக்ஷங்களில் தான்றி மரத்தின் கீழ் போகலாகாது. இதில் கலிவாஸம செய்கிறான். இப்படி பசு பக்ஷி விருக்ஷாதிகள் விஷயமே இருக்கிறது. மனிதர்

கள் சுருதிஸ்மிருதி புராண ஆசாரங்களுக்கு விரோதமாய் நடந்தால் வியாதிகள், தாரித்திரியம், கார்ய ஹானிகள் முதலியவை உண்டாகும் என்பதில் ஐய்யமில்லை.

आचारभ्रष्टदेहानां भवेद्धर्मः पराङ्मुखः ।

ஆசாரப்ரஷ்டதேஹாநாம் பவேத்தர்ம: பராங்முக: ॥

ஆசாரப் பிரஷ்டர்களுக்கு தர்மமானது விமுகமாய் விடும்.

तटाकभङ्गात् वेदबाह्यतः शास्त्रपरिशीलनात् ।
ब्रह्मस्वहरणाच्चैव सर्वाङ्गे वेदनाभवेत् ॥

தடாகபங்காத் வேதபாஹ்யத: ஶாஸ்த்ரபரிஶீலநாத் ।
ப்ரஹ்மஸ்வஹரணாச்சைவ ஸர்வாங்கே வேதநாபவேத் ॥

தடாகங்களைத் தூர்ப்பத்தாலும், வேதமார்க்கத்திலிருந்து நீங்கி மறுபடி ஆஸ்திக சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்வதாலும், பிராம்மணர்களுடைய சொத்தை அபஹரிப்பதாலும், பொருக்க முடியாத வலி சரீரத்தில் உண்டாகும்.

आचारहीनं न पुनन्ति वेदाः यद्यप्यधीताः सह षड्भिरङ्गैः ।
छन्दांस्येनं मृत्युकाले त्यजन्ति नीडं शकुन्ता इव जातपक्षाः ॥

ஆசாரஹீநம் ந புநந்தி வேதா: யத்யப்யதீதா: ஸஹ ஷ
ட்பிரங்கை: । சந்தாம்ஸ்யேநம் ம்ருத்யுகாலே த்யஜந்தி நீடம்
ஶகுந்தா இவ ஜாதபக்ஷா: ॥

ஸாங்கோபாங்கமாய் வேதங்களைக் கற்றறிந்தாலும், ஆசாரஹீனனை வேதங்கள் காக்கமாட்டா. அந்திய காலத்தில் அவனை இறகு முளைத்த பறவைக்குஞ்சுகள் கூட்டைவிட்டு ஓடி விடுவது போல் வேதங்கள் விட்டுவிடும். இவன் வெரும் ஆளாய் தான் செய்த ஜலக்கெடுதல் முதலிய பாபங்களுக்கு ஆளாய் யமயாதனைகளை அடைந்து நாநாயோனி ஸஹஸ்ரங்களில் பட்டு ஜனன மரணத் துன்பங்களுக்கு உள்ளாக நேரிடும்.

ஆனதால் சிஷ்டாசாரம், குலாசாரம், தேசாசாரம், வேதாசாரம் முதலியவைகளை விடாமல், ஸனாதன தர்மத்தை விடாமல் துர்போஜனம், துராலாபம், துஷ்ப்ரதிக்ரஹம், செய்யாமல் வேதசாஸ்திரங்களைக் கற்று அதனுள் கூறியபடி நடந்தால் அவைகள் ஸபலமாகும். இப்படிக் கர்மகாண்ட ரீதியாய் ஜலத்தில் அசுத்தங்கள் செய்யக் கூடாதென்று தெரிந்தவரையில் எழுதியிருக்கிறது.

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतं अश्नामि प्रयतात्मनः ॥

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌂 𑌅𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

பகவதாராதனத்தில் ஒரு துளஸீதளமாவது, அது கிடைக்காவிட்டால் ஒரு தாமரை மலராவது, அது கிடைக்காவிட்டால் இலந்தை முதலிய ஏதாவது ஒரு பழத்தையாவது, அதுவும் கிடைக்காவிட்டால் எங்கிலும் சுலபமாய்க் கிடைக்கும் ஜலத்தையாவது என்னை உத்தேசித்து பக்தியுடன் அர்ப்பணம் செய்தானேயானால் அதை அவன் பக்திக்கு மெச்சி ஒப்புக்கொள்ளுகிறேன். பகவானாலேயே ஜலத்திற்கு எவ்வளவு பெருமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

अभिषेकप्रियः शिवः 𑌅𑌭𑌿𑌷𑍇𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌶𑌿𑌵𑌃 ।

லக்ஷம் குடம் சுத்த ஜலத்தால ஸ்ரீ மஹாதேவனை ருத்திரமந்திரங்களைச் சொல்லி அபிஷேகம் செய்து வைத்தால் ஸகல புத்திர பிரதிபந்தகமும் நீங்கி ஜீவத் புத்திரப் பிராப்த்திஏற்படுமென்று ஜ்யோதிச் சாஸ்திரம் முறையிடுகிறது. சுபம்!

பனையப்பட்டி, வெங்கடேசய்யர்.

# ஒரு ஸந்தேஹம்.

நாளது அற்பசிமீ 37உ திங்கட் கிழமை (12—11—28)ல் அமாவாசை தினம் ஸம்பவிக்கும் கேதுக்ரஸத ஸூர்யக்ரஹண புண்ணிய காலதினத்தன்று அபரான்ஹ காலத்தில கிரஹணஸ்பரிச காலமானதால் அன்று மத்யான்ன காலத்தில் தர்சதர்ப்பணமும் அபரான்ன காலத்தில் கிரஹணதர்ப்பணமும், செய்ய வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். சிலர் ஒரு தினத்தில் இரண்டு தர்ப்பணம் செய்யக் கூடாது. அன்று கிரஹணதர்ப்பணம் மாத்திரம் செய்யவேண்டுமே ஒழிய தர்ச தர்ப்பணம் கிடையாதென்று சொல்லுகின்றார்கள். ஷை தினத்தில் இரண்டு தர்ப்பணமும் செய்ய வேண்டுமா? அல்லது கிரஹண தர்ப்பணம் மாத்திரம் செய்தால் போதுமா? என்பதை சாஸ்திர ஆதாரங்களுடன ஆஸ்திக சிகாமணிகளாகிய பண்டிதர்கள் அடுத்த வாரம் ஆர்யதர்ம பத்திரிகையிலேயே கிரஹணகாலத்திற்குள் எழுதிப் பிரசுரம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

M, S. சுந்தரேசய்யா,
செம்மங்குடி.